## புடவை பங்கீட்டுச் சபை

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து புடவை பங்கீட்டுச் சபையின் 2011 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 பெறவேண்டிய கணக்குகள்

சேவையை விட்டுச் சென்ற மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்தும் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் அறவிடவேண்டியிருந்த ரூபா 94,316 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) நி.பி 1645(அ) | சபைக்குச் சொந்தமாகக் காணப்பட்ட வாகனங்களுக்கான சம்பவத்திரட்டுப் புத்தகம் பேணப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபம் | மோட்டார் வாகனங்களின் எரிபொருள் நுகர்வு தொடர்பாக அசாதாரண முரண்கள் காணப்படுகின்றதா என அறிந்து கொள்ளும் வகையில் 6 மாதங்களுக்கு ஒரு தடவை பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2008 யூன் 26 ஆந் திகதிய 14/2008 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கை | வாகனக் கொடுப்பனவுகளைப் பெறும் உத்தியோகத்தர்களுக்கு அரசாங்கத்தின் வாகனங்களைப் பயன்படுத்துவதற்கு எவ்வித உரித்தும் இல்லாதிருந்த போதிலும் பதில் பணிப்பாளர் நாயகம் வாகனக் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொண்டு மேலும் ஒரு மோட்டார் வாகனத்தைப் பயன்படுத்தியிருந்தார். |
| (ஈ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றுநிருபம் | கணனி, கணனி உப பாகங்கள் மற்றும் மென் பொருட்கள் தொடர்பாக பிரத்தியேகமாக நிலையான சொத்துப் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2009 செப்தெம்பர் 01 ஆந் திகதிய டீஎம்ஏ/2009/(2) ஆம் இலக்க திறைசேரி முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றுநிருபம் | நிலையான சொத்துப் பதிவேட்டில் சொத்துக்கள், கிரய விபரங்கள், சொத்துக்களை விற்றுத்தீர்த்தல் மற்றும் சொத்துக்களின் சரி பிழை பார்த்தல் தொடர்பான விபரங்கள் எதுவும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின் பிரகாரம் மீளாய்வாண்டில் சபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து ஊழியர் இழப்பீடுகளைச் செலுத்திய பின் ரூபா 14,430,526 பற்றாக்குறை விளைவித்திருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மிகை

ரூபா 2,286,405 ஆனமையால் மீளாய்வாண்டுக்கான நிதி விளைவுகளில் ரூபா 16,716,931 ஆன அதாவது 731% ஆன வீழ்ச்சியொன்றைக் காண முடிந்தது.

## 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

நிதி விளைவுகளில் பற்றாக்குறைக்காக மீளாய்வாண்டில் 10 உத்தியோகத்தர்கள் சேவையிலிருந்து விலக்கப்பட்டமைக்காக செலுத்தப்பட்ட ரூபா 11,310,546 தொகையான ஊழியர் இழப்பீடு பிரதான காரணமாக இருந்ததுடன் வட்டிவருமானம் 39% இனாலும் சேவைக் கட்டண வருமானம் 59% இனாலும் தாமதக்கட்டண வருமானம் மற்றும் ஏனைய வருமானம் 82% இனாலும் மற்றும் வற் பதிவுக்கட்டணம் 49% இனாலும் குறைவடைந்தமையும் தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 செயலாற்றுகை

2011 ஆம் ஆண்டிற்குரிய சபையின் செயலாற்றலை மதிப்பிடுவதற்குத் தேவையான பதிவுசெய்யப்பட்ட ஆடைத் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை, தற்போது செயற்படுகின்ற ஆடைத் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை, வரி செலுத்துவதற்குரிய நிறுவனங்களின் எண்ணிக்கை, நிராகரிக்கப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை மற்றும் மூடப்பட்டிருந்த நிறுவனங்களின் எண்ணிக்கை போன்றவைகளைக் குறிப்பிட்ட தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையினால் 2011 ஆம் ஆண்டின் செயலாற்றலை மதிப்பிடுவதற்கு முடியாதிருந்தது.

## 3.2 முகாமைத்துவ வெயற்திறனின்மைகள்

புடவை பங்கீட்டுச் சபை முன்னர் நடாத்திச் செல்லப்பட்ட வாடகைக்கு பெறப்பட்ட கட்டிடத்தின் உள்ளக கூறிடல்களுக்குரிய கட்டிடப் பொருட்களை (Partition) ரூபா 65,700 இற்கு கொள்வனவு செய்வதற்கு வாடிக்கையாளர் ஒருவர் முன்வந்திருந்த போதிலும் அதனைக் கருத்திற் கொள்ளாது கட்டிடச் சொந்தக்காரருக்கு இலவசமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

### 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

2009 செப்தெம்பர் 22 ஆந் திகதி தொடக்கம் 2011 மார்ச் 10 ஆந் திகதி வரை விடுமுறை அங்கீகரிக்கப்படாமல் வெளிநாடு சென்றிருந்த ஒரு உத்தியோகத்தர் சேவையை விட்டுச் சென்றதாகக் கருதி தாபன விதிக்கோவையின் V ஆம் அத்தியாயத்தின் 7.1 ஆம் பிரிவின் பிரகாரம் சேவையிலிருந்து அகற்றாது மீளச் சேவையில் அமர்த்தப்பட்டிருந்தார். மேலும் சேவையிலில்லாத காலப்பகுதிக்காக 03 சம்பள அதிகரிப்புக்கள் வழங்கப்பட்டு 06 மாதங்களின் பின்னர் சேவை இழப்பீடாக ரூபா 1,383,491 தொகையையும் பெற்றுக் கொண்டு அவர் சேவையை விட்டுச் சென்றிருந்தார்.

### 3.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்

சபை கலைக்கப்பட வேண்டியிருந்தமையினால் சேவையை இழக்கும் 10 நிரந்தர ஊழியர்களுக்கு இழப்பீட்டினைச் செலுத்துவதற்கு இலங்கை துறைமுக அதிகார சபையின் 2011 ஏப்ரல் 04 ஆந் திகதிய 3/2011 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் அறிவுறுத்தல்களை உரியதாக்கிக் கொள்வதற்கு கைத்தொழில் மற்றும் வணிக செயற்பாடுகள் அமைச்சர் மற்றும் தொழில் ஆணையாளர் (தொழில்நுட்ப இணைப்பு) என்போர் இணக்கப்பாட்டினைத் தெரிவித்திருந்தார்கள். 2011 ஒக்தோபர் 07 ஆந் திகதிய அமப/11/1679/515/017-1 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் அதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அங்கீகரிக்கப்பட்ட இழப்பீடுகளைச் செலுத்தும் போது சுற்றுநிருபத்திற்கு முரணாக இழப்பீடு கணிப்பீடு செய்யப்பட்ட காரணத்தினால் ரூபா 4,181,780 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

### 3.5 செயற்பாடற்ற நிதியம்

1997 மற்றும் 1999 ஆம் ஆண்டுகளில் ரூபா 13 மில்லியன் கூட்டுத்தொகையான பணம் திறைசேரியின் பொது வைப்புக்கணக்கின் கீழ் வைப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும் அவ் வைப்புக்களுக்காக வட்டிக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படாதிருந்ததாக அரசாங்க கணக்குகள் திணைக்களத்தின் மூலம் சபைக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

**4. கணக்களிப்பும் நல் ஆளுகையும்**

**4.1 பணிப்பாளர் சபை**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 3.2 ஆம் பிரிவின் பிரகாரம் பணிப்பாளர் சபையொன்று நியமிக்கப்பட்டு கூட்டங்கள் நடாத்தப்பட்டு அதன்பிரகாரம் தீர்மானங்கள் எடுக்க வேண்டியிருந்த போதிலும் 2009 ஆம் ஆண்டு தொடக்கம் சபையின் நடவடிக்கைகளுக்காக பணிப்பாளர் சபையொன்று நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.2 கூட்டிணைந்த திட்டம்**

மேலே 4.1 இல் குறிப்பிடப்பட்ட சுற்று நிருபத்தின் 5.1.1 மற்றும் 5.1.2 ஆம் பிரிவுகளின் பிரகாரம் மீளாய்வாண்டை உள்ளடக்கும் வகையில் கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம் என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 உள்ளகக் கணக்காய்வு**

மீளாய்வாண்டில் சபையின் செயற்பாடுகள் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.4 பாதீட்டுக் கட்டுப்பாடு**

2010 மற்றும் 2011 ஆம் கணக்காண்டுகளுக்காக சபையினால் பாதீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது வரிசை அமைச்சின் செயலாளரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) நிதியப் பயன்பாடு

(ஆ) ஊழியர் இழப்பீடு செலுத்துதல்

(இ) பெறவேண்டிய கணக்குகள்